உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.583/2023

பெயர் : சதீஷ்குமார்(அ.சா.5)

தகப்பனார் பெயர் :குருசாமி

கணவர் பெயர் :

வயது :31

கிராமம் :கோட்டநத்தம்பட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

22.11.2024

முதல் விசாரணை:

நான் கோட்டநத்தம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நதியா எனக்கு அண்ணி ஆவார். 20.12.2021 அன்று என் அம்மா பஞ்சவர்ணம் கைப்பேசிக்கு போன் வந்தது. நதியா மீது அவருடைய சித்தப்பா கொதிக்கும் எண்ணெயை ஊற்றிவிட்டதாக தகவல் வந்தது. நான் மற்றும் என் தாயார் காரை எடுத்துக்கொண்டு பூதமங்கலத்திற்கு சென்றோம். நதியா என் அண்ணி உடம்பு முழுவதும் மாவு ஊற்றப்பட்ட நிலையில் இருந்தது. ஆம்புலன்சுக்கு ஊர்க்காரர்கள் தகவல் கொடுத்து, ஆம்புலன்ஸ் வந்தது. அதில் எனது அண்ணி நதியாவுடன், நதியா அம்மாவும், என் அம்மா பஞ்சவர்ணமும் அவருடன் சென்றார்கள். மேலூர் அரசு மருத்துவமனையில் இதுதொடர்பாக என் அண்ணி சித்தியும், சித்தப்பாவும் எண்ணெயை கொதிக்க வைத்து ஊற்றியதாக வாக்குமூலம் காவலர்களிடம் கொடுத்தார். வாக்குமூலம் கொடுக்கும் போது

நான் உடன் இருந்தேன். நதியா தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மேலூர் அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் கொடுத்தார். சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காட்டப்பட்டு, அதில் அறிவேன் சாட்சியாக தான் கையெழுத்திட்டதாக சாட்சி கூறவே மேற்படி கையெழுத்தானது, அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக காவல்நிலையத்தார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை : வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.11.22 18:10:22 +0530

Assistant Sessions Judge

Melur